**பதுளை மாநகர சபை**

**பதுளை மாவட்டம்**

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 செப்டம்பர் 16 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 திசெம்பர் 09 திகதி மாநகர சபையின் நகர பிதாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 7அபிப்பிராயம்

---------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, பதுளை மாநகர சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர சபைக்குச் சொந்தமான 13 கட்டடங்களின், 50 காணித் துண்டுகளின் மற்றும் 08 மோட்டார் வாகனங்களின் பெறுமதியினை மீளாய்வாண்டின் போது பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊழியர் பிணை முதலீடுகள் என ரூபா 282,186 தொகை என காட்டபட வேண்டும் எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 193,920 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் ரூபா 88,266 இனால் குறைவாக காட்டடப்பட்டிருந்ததுடன் ஊழியர் பிணை வைப்புக்கள் குறைவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் பொறுப்புக்கள் ரூபா 88,266 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் என ரூபா 14,851,605 தொகை ஒன்று காட்டப்பட வேண்டும், எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 14,867,246 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் ரூபா 15,641 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 547,543 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும் எனினும் அவை ரூபா 404,931 தொகையென காட்டப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் ரூபா 142,612 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு தொடர்பான நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 1,412,884 தொகை எனினும், வருமானச் செலவுக் கணக்குகளில் ரூபா 1,488,096 தொகையினை செலவு வைத்ததன் காரணமாக ஆண்டிற்கான வருமானம் ரூபா 75,212 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த தொகையை விட மீளாய்வாண்டின் போது முத்திரை கட்டண வருமானம் ரூபா 6,247,803 தொகை ஒன்று கிடைத்திருந்த போதிலும் ரூபா 9,003,709 தொகையினை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருந்த காரணத்தினால் திரண்ட நிதியம் ரூபா 2,755,906 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 21,622,362 தொகை எனினும், அதனை நிதிக் கூற்றுக்களில் ரூபா 21,368,079 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர்கள் ரூபா 254,283 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 4,759,701 தொகை எனினும், அதனை நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,757,547 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர்கள் ரூபா 2,154 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்புத் தொகை ரூபா 27,830,575 தொகை எனினும், அதனை நிதிக் கூற்றுக்களில் ரூபா 27,731,685 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 98,890 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த கடன் தவணைப் பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,653,679 ஆகும். அக் கடன் தவணைப் பணங்களில் முன்னைய ஆண்டுகளுக்கான வட்டித் தொகை ஆகிய ரூபா 1,996,635 இனை கடன்கொடுத்தோருக்கும், தவணைப்பணங்களில் மூலதன பெறுமதியாகிய ரூபா 223,706 தொகையினை உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கும், ஆண்டிற்கான வட்டியாகிய ரூபா 433,338 தொகையினை வருமானச் செலவுக் கணக்கிற்கும் வரவு வைக்கப்பட வேண்டும். எனினும், இந்த முழுத்தொகையும் உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) கடன் தொகையினை மீளமைப்பு செய்த காரணத்தினால் நிலுவை வட்டித் தொகையினை கடன் கணக்குடன் கூட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக கடன் தொகை ரூபா 25,486,785 இனால் அதிகரித்திருந்தது. அவ் வித்தியாசம் கடன்கொடுத்தோரின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திரண்ட நிதியத்தின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக திரண்ட நிதியம் ரூபா 27,991,099 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மேலே (ஒ மற்றும் ஓ) சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி ரூபா 114,842,503 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 114,961,844 தொகை என காட்டப்பட்டிருந்த

காரணத்தினால் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் ரூபா 74,341 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் வட்டித் தொகையாக ரூபா 5,081,776 கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2014 அக்டோபர் 27 திகதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் சபைக்கு வழங்கியிருந்த கடனுக்கான நிலுவை வட்டியும் சேர்க்கப்பட்டு கடன் செலுத்தும் முறைமையொன்று அறிமுகப்படுத்திய காரணமாக வட்டிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளத் தேவையில்லை என காணக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான மிகை ரூபா 5,081,776 இனால் குறைவடைந்திருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

சபையினால் சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகள் தொடர்புடைய துணைப் பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 29,913,383 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 84,348,697 ஆக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 102,342,067 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

(அ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமை

--------------------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 59,332,353 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

---------------------------------------------------------------------------------------

2015 அக்டோபர் 09 திகதி வரை வழங்கப்பட்டிருந்த 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் சமர்பித்தியிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) உள்ளராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்றுநிருபம் | குறைந்த பட்சம் 5 வருடங்களுக்கு ஒருமுறையேனும் மாதாந்த வாடகையினை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், தரையளவு 1126 சதுர அடி கொண்ட சேனானாயகபிடிய பால் விற்பனை நிலையத்தை வாடகைக்கு கொடுக்கும் போது வாடகையினை பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் சுமார் 18 வருட காலம் முதல் ரூபா 5,000 இற்கான மாதாந்த வாடகை தொடர்ந்தும் அறவிடப்பட்டு காணப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுள்ள, சேவையை விட்டு சென்றுள்ள மற்றும் வேலை இடை நிறுத்தப்பட்டுள்ள 26 ஊழியர்கள் / அலுவர்களிடமிருந்து அறவிடப்பட்ட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,580,510 இற்கான பதவியணிக் கடன் தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (இ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களை மிகைத்துள்ள கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்பிக்கப்பட்டிருக்காத ரூபா 251,766 தொகை பெறுமதியான 33 காசோலைகள் தொடரபாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | வைப்பு செய்யப்பட்டு இரண்டு வருட காலத்தைக் மிகைத்துள்ள ரூபா 4,645,578 இற்கான திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிமையளிப்பு செய்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 371 | 1998 ஆண்டு முதல் 2014 வரையான காலப் பகுதியில் 55 சந்தர்ப்பங்களில் பல்வேறு கருமாங்களுக்காக பல்வேறு சாராருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் ரூபா 4,450,558 தொகையினை நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணம் 756 | 2014 ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் பண்டங்கள் தொடர்பாக வருடாந்தக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம்

ரூபா 33,781,222 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,712,779 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 35,494,001 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம்

---------------------------------------

பல்வேறு கட்டளை சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றில் இருந்து 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 4,757,547 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மாநகர சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.2 முத்திரைக் கட்டணம்

----------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ஊவா மாகாண பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டு, எனினும் மாகாண திறைசேரியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரூபா 21,368,079 இற்கான முத்திரை கட்டணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு

(உ) கோவைகள் பராமரிப்பு